**23.03.2026 <u>அசல் வழக்கு எண். 56/2015</u> Starting Time : 3.29 p.m.**

**<u>வா.சா.2</u> திரு. ஆயுப்அலி த/பெ.அலிஜான் சாயபு.**

**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, 4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1**). என் தகப்பனார் பெயர் என்ன என்றால் அலிஜான் சாயபு ஆகும். எனது தாயார் பெயர் என்ன என்றால் சோட்டிமா பீவி ஆகும். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் 1976ல் பிறந்தேன். என் தகப்பனார் காலமானபோது எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 5,6 வயது இருக்கும். என் தகப்பனாரின் தகப்பனார் பெயர் குன்னா சாயபு என்ற ஷம்ஷேர் அலி சாயபு ஆகும். மேற்படி குன்னா சாயபு என்பவருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவியின் பெயர் கதீஜாபீவி என்றால் சரிதான். இரண்டாவது மனைவி பெயர் சோட்டிமா பீவி என்றால் சரிதான். கதீஜா பீவிக்கு மொத்தம் எத்தனை குழந்தைகள் என்றால் எட்டு பேர் ஆவார்கள், ஐந்து பெண் மக்கள், மூன் ஆண் மக்கள் ஆவார்கள். அவர்கள் பெயர் பீபி ஜான், அம்முபேகம், குலாரிபேகம், அனிப்பேகம், அமீனாபேகம், அலிஜான், அம்ஜத் அலி, காதர் அலி ஆகியோர்கள் ஆவார்கள். இரண்டாவது மனைவி சோட்டிமா பீவிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள் ஆவார்கள். அவர்கள் அசன் அலி, குலாப்பேகம் ஆகும்.

**2**). என் தகப்பனார் காலமாகும்போது அவருக்கு எத்தனை குழந்தைகள் என்றால் மொத்தம் ஆறு பேர் ஆவோம், அதில் ஒருவர் காலமாகிவிட்டார். தற்போது என்னையும் சேர்த்து ஐந்து பேர் உள்ளோம். இறந்தவரின் பெயர் என்ன என்றால் யூசுப் அலி. அவர் எத்தனை வயதில் காலமானார் என்றால் அப்போது நான் சிறு வயதாக இருந்ததால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி யூசுப் அலி என் அப்பா காலமான பிறகு இறந்தாரா அல்லது அதற்கு முன்பு இறந்தாரா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. எங்களின் மூத்தவர் பெயர் என்ன என்றால் யாக்கூப் அலி, ஜெரினா, ஷம்ஷாத், நான்காவதாக நான், ஷாருமா ஆகியோர் ஆவோம். என் தகப்பனார் இறக்கும்போது யாக்கூப் அலிக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் 19 வயது இருக்கும். மற்றவர்களுக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் அனைவரும் சிறிய வயதில் இருந்தோம்.

**3**). எனது அப்பா காலமான பிறகு யார் எங்களை பார்த்துக் கொண்டார்கள் என்றால் எனது அம்மா தான் படிக்க வைத்து பராமரித்து வந்தார். நான் எங்கு படித்தேன் என்றால் 5ம் வகுப்பு வரை வந்தவாசியில் படித்து வந்தேன், பிறகு சென்னையில் விடுதியில் தங்கி படித்து வந்தேன். பிறகு வேலைக்கு சென்றுவிட்டேன். நான் வந்தவாசியில் படித்தபோதும், சென்னையில் படித்து வந்தபோதும் எனது அம்மா எங்கு வசித்து வந்தார் என்றால் கோட்டைக்குள் தெருவில் வசித்து வந்தார். என் சகோதர, சகோதரிகள் அனைவரும் என் அம்மாவுடன் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கு முன்பு எனது சகோதரி ஷாருமா என்பவர் சாட்சிமளித்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் கேள்விப்பட்டேன், தற்போது தான் தெரிய வந்தது. மேற்படி ஷாருமாவின் சாட்சிய வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

**4**). இந்த வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் நான், எனது தங்கை ஷாருமா மற்றும் ஜெரினா ஆகியோர் தாக்கல் செய்தோம். இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் எந்த ஆவணத்தின் அடிப்படையில் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்றால் எனது வழக்கறிஞர் மூலம் தயாரிக்கப்பட்டது ஆகும். இந்த வழக்கின் சொத்து விவரத்தில் உள்ள சர்வே எண், ஜக்பந்தி, வழக்கில் உள்ள ஆவணங்கள் யார் ஒப்படைத்தது என்றால் எனது அக்கா ஷம்ஷாத் ஒப்படைத்தார். ஷம்ஷாத் என்பவரின் மற்றொரு பெயர் என்ன என்றால் ஷப்பு ஆகும். அவர் இந்த வழக்கின் 3ம் பிரதிவாதி என்றால் சரிதான். இந்த வழக்கை தயார் செய்தபோது எனது தாயார் உடன் இருந்தாரா என்றால் இருந்தார். யாக்கூப் அலியும் உடன் இருந்தாரா என்றால் இருந்தார்.

**5**). இந்த வழக்கில் எந்த வருடத்திற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம் என்று எனக்கு தெரியுமா என்றால் 1910ம் வருட ஆவணமான காத்துன்பீ கிரயம் பெற்ற ஆவணத்தை தாக்கல் செய்துள்ளோம். காத்துன்பீ என்பவரின் கணவர் என்ன என்றால் ரஜாலி சாயபு ஆகும். குன்னா சாயபுவின் தகப்பனார் பெயர் என்ன என்றால் ரஜாலி சாயபு ஆகும். மேற்படி ரஜாலி சாயபு என்பவருக்கு காத்துன்பீ-யை தவிர வேறு மனைவி உள்ளார்களா என்றால் இல்லை. ரஜாலி சாயபுவுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் நான்கு குழந்தைகள் ஆவார்கள். அவர்கள் தக்கையாரலி, குன்னா சாயபு என்கிற ஷம்ஷேர்அலி, ஷத்துசாயபு, சோட்டி சாயபு ஆகியோர்கள் ஆவார்கள். தக்கையாரலி என்பவரின் மனைவி பெயர் என்ன என்றால் தெரியாது.

**6)**. 1910ம் ஆண்டின் காத்துன்பீ பெயரில் உள்ள கிரய ஆவணத்தின்படி காத்துன்பீகாலமான பிறகு அவரது சொத்துக்கள் அவரின் நான்கு குழந்தைகளுக்கு தான் சேரும் என்றால் சரிதான். அதன் அடிப்படையில் குன்னா சாயபுவிற்கு கிடைத்த சொத்தானது அவரது முதல் மனைவியின் பிள்ளைகளான எட்டு பேருக்கும், இரண்டாம் மனைவியின் பிள்ளைகளான இரண்டு பிள்ளைகளுக்கும் சேர்த்து பத்து பேருக்கு தான் சேரத் தக்கது என்றால் சரிதான், அதில் எனது அப்பாவிற்கும் உரிமை உண்டு. மேற்படி என் தகப்பனாரான அலிஜான்சாயபு என்பவருக்கு இந்த வழக்கின் வாதிகளான நாங்கள் மூவரும், 1ம் பிரதிவாதியான எனது தாயாரும் மற்றும் 2,3 பிரதிவாதிகள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். குன்னா சாயபுவின் வாரிசுகளான கதீஜா பீவின் வாரிசுகளுக்கும், எனது தகப்பனாருக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். அதேபோல் கதீஜாபீவி வாரிசுகளுக்கும், இரண்டாம் மனைவி சோட்டிமா பீவி வாரிசுகளுக்கும் இடையே எவ்வித பிரச்சனையும் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**7)**. எனது தாயார் மைனராகிய எனக்கும் கார்டியனாக இருந்து சொத்துக்களை 1984ல் 4ம் பிரதிவாதியின் தாயாரான உறபிபுன்னிசா என்பவருக்கு கிரயம் செய்துக் கொடுத்த விவரம் எனக்கு எந்த வயதில் தெரிய வந்தது என்றால் எனக்கு 46 வயது இருக்கும்போது தெரிய வந்தது. கடந்த 26.02.2026 தேதியன்று நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையின்போது, எனது வயதை 41 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, தற்போது எனக்கு 50 வயதாகிறது. இந்த வழக்கு தாக்கல் செய்யும்போது 1984ல் எங்களது தாயார் எங்களுக்கு கார்டியனாக இருந்து 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு கிரயம் கொடுத்த விவரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**8)**. இந்த வழக்கை தாக்கல் செய்தபோது தாவா சொத்திற்கான வில்லங்கம் மற்றும் பட்டா போட்டு பார்த்தோமா என்றால் நான் பார்க்கவில்லை, எனது அக்கா 3ம் பிரதிவாதி ஷப்பு என்கிற ஷம்ஷாத் பார்த்தார். இந்த வழக்கை தாக்கல் செய்தபோது இந்த வழக்கை தாக்கல் செய்த விவரம் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தெரியுமா என்றால் தெரியும். 1984ல் சோட்டிமா பீவி உறபிபு நிஷாவிற்கு எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் அலிஜான் சாயபுவின் வாரிசுகளாகிய 1 முதல் 3 வாதிகளாகிய நாங்களும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் மட்டும் தான் தரப்பினர்களாக உள்ளோம் என்றால் சரிதான். குன்னா சாயபுவின் மற்ற

வாரிசுகள் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் யாரும் இங்கு இல்லை, சொத்தை விற்றுவிட்டு வெளியூரில் இருந்து வருகிறார்கள். எனது சிறு வயதில் இருந்தே குன்னா சாயபுவின் மற்ற வாரிசுகளை நான் வந்தவாசியில் பார்த்தது இல்லை என்றால் சரிதான். அம்னுபீவின் வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் இருக்கிறார்கள். அம்னு பீவி காலமாகிவிட்டார். அவரின் வாரிசுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

**9**). குன்னா சாயபுவின் 10 வாரிசுகளும் உயிருடன் இருக்கிறார்களா என்றால் குலாப் என்பவரை தவிர மற்ற அனைவரும் காலமாகிவிட்டனர். மேற்படி காலமான நபர்களின் வாரிசுகள் இருக்கிறார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் பாக விகிதாச்சார விவரமும், விஸ்தீரண விகிதாச்சார விவரமும் எவ்வாறு கணக்கிட்டு சொன்னோம் என்ற விவரத்தை கூற முடியுமா என்றால் நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் கணக்கீடு செய்தோம். குன்னா சாயபுவின் பத்து வாரிசுகளில் என் தகப்பனாருக்கு பாத்யப்பட்ட சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி தெரியாது.

**10**). என் அப்பா என்ன வேலை செய்து வந்தார் என்றால் டெய்லர் வேலை பார்த்து வந்தார். எனது தகப்பனார் காலமான பிறகு எனது தாயார் என்ன வேலை செய்து வந்தார் என்றால் சென்னையில் இருந்து துணி எடுத்து வந்து இங்கு வியாபாரம் செய்து வந்தார். வசதியாக இருந்து வந்தோமா என்றால் வசதியாக தான் இருந்து வந்தோம். குன்னா சாயபுவின் மற்ற வாரிசுகளை இந்த வழக்கில் விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் இல்லை. நான் இஸ்லாமிய மார்க்கத்தை தான் தழுவி வருகிறேன் என்றால் சரிதான். முன்னோர்களின் ஈம காரிய சடங்குகளை அவரது வாரிசுகள் தான் செய்ய வேண்டும் என்றால் சரிதான். அந்த வகையில் தான் குன்னா சாயபுவின் ஈம காரியங்களை அவரது வாரிசுகள் செய்தார்கள் என்றால் சரிதான். அந்த வகையில் குன்னா சாயபுவின் வாரிசுகள் மற்றும் எனது தாயாரும் சேர்ந்து மைனர்களாகிய எங்களுக்கு கார்டியனாக இருந்து 1984ல் 4ம் பிரதிவாதியின் தாயாருக்கு சொத்தை விற்பனை செய்தார்கள் என்றால் சரிதான், எனது தாயாருக்கு எழுத படிக்க தெரியாது.

**11**). 1984ல் எனது சகோதரர் யாக்கூப் அலிக்கு 15 வயது என குறிப்பிட்டு எனது தாயார் பத்திரத்தில் எழுதியுள்ளார் என்றால் எழுத படிக்க தெரியாத

எனது தாயார் எவ்வாறு குறிப்பிட்டிருப்பார், குன்னா சாயபுவின் மற்ற வாரிசுகள் எனது தாயாரை கையெழுத்து போட சொன்னதால் எனது தாயார் போட்டார். 4ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் எனது தாயார் மீது எனது தாயார் புறம்போக்கு இடத்தில் வீடு கட்டியுள்ளதாகவும், அதை இடித்து காலி செய்ய உத்தரவு கேட்டு வழக்கு தாக்கல் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. புறம்போக்கு இடத்தில் எனது தாயார் ஆக்ரமிப்பு செய்து வீடு கட்டியும், 4ம் பிரதிவாதியின் வீட்டிற்கு செல்லும் வழியில் இடைஞ்சலாக குழாய் போடுவதற்கு பள்ளம் தோண்டியதாகவும், அதை நிறுத்துவதற்காக 4ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் மற்றொரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி வழக்கு விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதி எனது தாயார் மீது வழக்கு தாக்கல் செய்தும், அந்த வழக்கின் மீது மாண்பமை உயர்நீதிமன்றத்தில் direction வாங்கியுள்ளார் என்றும், அதனால் தான் எனது தாயாரின் தூண்டுதலின் பேரில் நாங்கள் இந்த வழக்கை 4ம் பிரதிவாதியின் மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல, அது பொய் வழக்கு ஆகும்.

**12).** இந்த வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி 636 சதுரடி என குறிப்பிடுவதற்கு ஆவணம் ஏதும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அது எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும். இந்த வழக்கு சொத்தில் எங்களுக்கோ, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றும், வழக்கில் கூறியுள்ள காரணங்கள் தவறு என்றும், சொத்து விவரமும் தவறு என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றும், எந்த பரிகாரமும் நாங்கள் கேட்க முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

**Ending time : 4.26 p.m.**

Taken down by me in Open court read over to the witness in the presence of the Plaintiff/Defendant and admitted by him/her to be correct.

Sd/-C. Mahalakshmi,
District Munsif,
Vandavasi.